**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.46/2014**

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ஆம் நாள் **பி.வா.சா.3** சாட்சி **திரு.பரத்குமார்** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.பரத்குமார்** | வயது | : | |
| த/பெ | : | | சாதி | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | தொழில் | : | |

**பி.வா.சா.3 : முதல் விசாரணை:**

நான் காவல் உதவி ஆய்வாளராகவும், விரல்ரேகை நிபுனராகவும் தமிழ்நாடு விரல்ரேகை கூடம் சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அ.வ.எண்.46/2014 க்கான ஆவணம் எனது அலுவலகத்தில் மூலமாக எனக்கு கருத்துரை வழங்க 28.07.2023 ம் தேதியன்று எனக்கு வழங்கப்பட்டது. இதற்கான கருத்துரை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கிறேன். **சர்ச்சைக்குரிய விரல் ரேகை ஆவணம்:** சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் உயில் சாசனம் ஆவண எண்.65/BK.3/1984 தேதி 27.08.1984-ன் முதல் தாளின் முன்பக்கத்தில் உள்ள காளிமுத்துகவுண்டர் என்பவரின் பெயருக்கு அருகில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை D1 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் உயில் சாசனம் ஆவண எண்.65/BK.3/1984 தேதி 27.08.1984-ன் முதல் தாளின் பின்பக்கத்தில் உள்ள காளிமுத்துகவுண்டர் என்பவரின் பெயருக்கு அருகில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை D2 என குறியீடு

செய்யப்பட்டுள்ளது. சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் உயில் சாசனம் ஆவண எண்.65/BK.3/1984 தேதி 27.08.1984-ன் 2ம் தாளின் முன்பக்கத்தில் உள்ள காளிமுத்துகவுண்டர் என்பவரின் பெயருக்கு அருகில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை D3 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புக்கொள்ளப்பட்ட விரல் ரேகை ஆவணம்: அசல் மின் கட்டன அட்டையில் கணக்கு எண்.10035249/EB10042 காளிமுத்துகவுண்டர் என்பவரின் பெயருக்கு அருகில் உள்ள இடது பெருவிரல் ரேகை A1 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. சத்தியமங்கலம் கூட்டுறவு நகர்புற வங்கிக்கு ஆதரவாக ரூ.500/- தொகைக்கு வரையப்பட்ட அசல் உறுதிமொழி அறிக்கை 13.03.1987ம் தேதியில் உள்ள காளிமுத்து என்பவரின் பெயருக்கு அருகில் உள்ள இடது பெருவிரல் ரேகை A2 என குறியீடு செய்யப்பட்டது. **கருத்துரு:** சர்ச்சைக்குரிய விரல் ரேகைகள் D1, D2 மற்றும் D3 ஆகிய மூன்று விரல் ரேகைகளும் ஒன்றோடு ஒன்று ஒத்துபோகிறது. ஒப்புக்கொள்ளப்பட்ட விரல் ரேகைகள் A1 மற்றும் A2 இவ்விரண்டு விரல் ரேகைகள் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகிறது. சர்ச்சைக்குரிய விரல் ரேகைகள் D1, D2 மற்றும் D3 மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட விரல் ரேகைகள் A1 மற்றும் A2 ஒப்பிட்டு பார்த்ததில் குறைந்தபட்சம் எட்டு ரேகை கூறுகள் அல்லது குணாதிசியங்கள் அந்ததந்த இடங்களில் தொடர்ச்சியாக ஒன்றோடு ஒன்று ஒத்துபோகிறது. மேற்படி D2 மற்றும் A2 விரல் ரேகைகளின் புகைப்படும் பெரிதுபடுத்தி நீதிமன்றத்தின் பயன்பாட்டிற்காக வெள்ளைத்தாளில் ஒட்டப்பட்டுள்ளது. கருத்துரையை நான் தாயர் செய்த பின்னர் எனது மேல் அதிகாரிகள் சரிபார்த்த பின்னரே நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது என்னிடம் ஆவணம் நான் கருத்துரை வழங்கி அனுப்பட்ட ஆவணம் என்றும் அது பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>வாதிகள் குறுக்கு விசாரணை:</u>**

சர்ச்சைக்குரிய விரல் ரேகையை வைத்து தெளிவான மனநிலையில் வைக்கப்பட்ட கைவிரல் ரேகையா அல்லது கட்டாயத்தின்பேரில் வைக்கப்பட்ட விரல் ரேகையா என்று எங்களால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான்.

(ஒ/ம்.என்.ஷர்மிளா)

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.